**IN THE COURT OF SUB COURT, USILAMPATTI**

**O.S. No.82 / 2021,**

**Dated: 15.06.2026**

Name : ராஜம்மாள் (PW2)

D1 to D4 தரப்பு குறுக்கு விசாரணை :

நான் நல்ஒச்சான்பட்டியில் பிறந்ததிலிருந் குடியிருக்கிறேன். எனக்கு சுமார் 70 வயது. எனக்கு 14 வயதில் திருமணம் ஆனது. எனக்கு திருமணம் ஆகும் போது என் அப்பா உடல் நிலை சரியில்லாமல் படுத்தபடுக்கையாக இருந்தார் . எனக்கு திருமணம் ஆகி 1 1/2 ஆண்டுகளில் இறந்துவிட்டார். 2 ம் வாதி என் தங்கை , 1 ம் வாதி என் தம்பி. என் திருமணத்தின் போது 1 ம் வாதி தான் உழைத்து சம்பாரித்தார் என்றால் சரியில்லை அப்போது அவருக்கு 10 வயது கூட கிடையாது. எனக்கும் என் தம்பிக்கும் எத்தனை வயது வித்தியாசம் என்றால் 4 வயது குறைவாக இருக்கும். எனக்கு 4 பிள்ளைகள் அதில் 3 ஆண் பிள்ளை , 1 பெண் பிள்ளை அவர்கள் அனைவருக்கும் திருமணம் முடிந்து விட்டது. என் கடைசி மகன் திருமணம் ஆகி சுமார் 7, 8 ஆண்டுகள் இருக்கும். இந்த வழக்கு தாக்கல் செய்து 6 ஆண்டுகள் ஆகிறது. இந்த வழக்கில் சொத்து வேண்டும் என்று கேட்டு தாக்கல் செய்துள்ளேன். இந்த வழக்கில் 2 தோட்டம், 1 வீடு சொத்து அட்டவணையில் காட்டியுள்ளேன் . 2 தோட்டத்தில் புல எண் தெரியாது விஸ்தீரணம் 3 ஏக்கர் 65 சென்டு. மேற்படி சொத்து ஒரே சொத்தாக உள்ளது. ஒரே புல எண்ணா, 2 புல எண்ணா என்று தெரியாது. சொத்து அட்டவணையில் 4மால் விவரம் சொல்லியுள்ளேன் . 4மால் விவரம் வடக்கே குன்றன் என்ற ஒச்சாத்தேவர் , தெற்கே போடி ஒச்சாத்தேவர், கிழக்கே

ஓடை, மேற்கே முத்துக்கருப்பன் என்ற அய்யாவு இடம் உள்ளது. தாவா சொத்துக்கள் என் அப்பா, அம்மா சம்பாரித்த சொத்துக்கள். அவர்கள் சம்பாரித்த சொத்துக்கள் என்று காட்ட பத்திரம் உள்ளது. நான் பத்திரங்களை பார்த்துள்ளேன். அந்த அசல் பத்திரங்களை தாக்கல் செய்துள்ளேன். இந்த 3 ஏக்கர் 65 செண்டை 4 பத்திரங்கள் மூலம் வாங்கப்பட்டது. பத்திரங்கள் கிரையம் வாங்கப்பட்ட விவரங்கள் அப்பா, அம்மா சொல்லி தெரியும். எனக்கு பத்திரங்களை படிக்க தெரியும். இந்த சொத்துக்களை 1ம் பிரதிவாதி மட்டும் அனுபவிப்பதாக சொல்லியுள்ளேன் என்றால் 3 பேரும் அனுபவம் செய்கிறார்கள். நானும் சேர்ந்து அனுபவம் செய்வதை காட்ட பட்டா, கிஸ்தி, அடங்கல் ஆவணம் தாக்கல் செய்யவில்லை. எனது தாயார் இறந்து 6 ஆண்டுகள் ஆகிறது. எனது பிராதில் தாயார் எப்போது இறந்தார் என்று சொல்லியுள்ளேன். பட்டா ஆரம்பத்தில் என் அம்மா பெயரில் இருந்து தற்போது எனக்கு தெரியாமல் 1ம் பிரதிவாதி பெயருக்கு மாற்றப்பட்டுள்ளது. வழக்கு தாக்கல் செய்த போது பட்டா 1ம் பிரதிவாதி பெயரில் தான் இருந்தது. பட்டா 1ம் பிரதிவாதி பெயருக்கு மாற்றப்பட்ட விவரம் என் அம்மா இறந்த பிறகு தெரிந்து கொண்டேன். 2016ல் பட்டா மாற்றப்பட்டதாக தெரிந்து கொண்டேன். வீட்டிற்கு மின்இணைப்பு, வீட்டுவரி என் அம்மா பெயரில் தான் இருந்தது அதை 1ம் பிரதிவாதி மாற்றிக்கொண்டார் எப்போது மாற்றினார் என்று தெரியாது. வீட்டிற்கு பெயர் மாற்றம் செய்யப்பட்ட விவரம் என் அம்மா இறந்த பிறகு தெரிந்து கொண்டேன். அந்த வீட்டில் தற்போது யாரும் குடியிருக்க வில்லை. கிரையம் வாங்கிய நபர்களை நான் உள்ளே இருக்க விடவில்லை. அந்த வீட்டை குபேந்திரன் என்பவர் கிரையம் வாங்கி இருந்தார்.

குபேந்திரன் சுமார் 7 ஆண்டுகளுக்கு முன்பு கிரையம் வாங்கினார் . அந்த பத்திரத்தை தாக்கல் செய்துள்ளேன் . குபேந்திரன் கிரையம் வாங்கி விவரத்தை என் அம்மா இறந்த பிறகு தெரிந்து கொண்டேன் . வா.சா.ஆ.7 நகல் எடுத்துவந்தோம் . அந்த கிரைய ஆவணத்தில் பூர்வீக சொத்தை விற்பனை செய்வதாக குறிப்பிட்டுள்ளது ஆனால் அது பொது சொத்து . வா.சா.ஆ.7 ஏற்படுத்தப்பட்ட போதே 1 ம் பிரதிவாதி பெயரில் பட்டா , வீட்டுவரி ரசீது இருந்தது என்றால் பெயர் மாற்றம் செய்து தான் பத்திரம் ஏற்படுத்தி உள்ளார் . என் தாய், தந்தை பெயரில் வீடு இருந்தது என்று காட்ட ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியில்லை . என் அம்மா பெயரில் 1982 ம் ஆண்டில் மின் இணைப்பு மற்றும் வீட்டு ரசீது தாக்கல் செய்துள்ளேன். பிராதிலோ விசாரனையிலோ வா.சா.ஆ.1 மற்றும் நானோ 3 ம் இலக்க சொத்திற்கு என் தாயார் பெயரில் வீட்டு வரி ரசீதோ , தாக்கல் செய்யவில்லை என்றால் சரியில்லை . வா.சா.ஆ.7 கண்ட சொத்தானது 1 ம் பிரதிவாதி தனித்து பாத்தியப்பட்டு அவரது பெயரால் பட்டா மற்றும் வீட்டு வரி ஏற்பட்டு அந்த சொத்தினை குபேந்திரன் என்பவருக்கு கிரையம் கொடுத்துள்ளது சட்டப்படி செல்லும் என்றால் சரியல்ல. அந்த கிரையம் சரியானது என்பதால் தான் அதை ரத்து செய்ய பரிகாரம் கேட்கவில்லை என்றால் சரியல்ல . 3 ம் இலக்க சொத்து தற்போது குபேந்திரன் தான் குடியிருந்து வருகிறார் என்றாலும் நான் வழக்கிற்காக மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியில்லை . வீட்டிற்கு பட்டா , வீட்டு வரி ரசீது , மின்இணைப்பு குபேந்திரன் பெயரில் தான் உள்ளது என்றால் அவர்கள் மாற்றிக்கொண்டதால் தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் . 3 ம் இலக்க

வீட்டின் நான்கு மால் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்லை . எனக்கு சர்வே எண், கதவு இலக்கம் ஞாபகம் இல்லை. அந்த வீட்டில் 2 வாசல்கால் உள்ளது. தாவா சொத்துக்களில் எனக்கு கொடுக்க வேண்டிய பாகத்திற்கு ஈடாக நகை சீர்வரிசை வாங்கி சென்றுவிட்டேன் என்றாலும் எனவே எனது தாயார் தாவா சொத்துக்களை 1 ம் பிரதிவாதி பெயருக்கு எங்கள் சம்மதத்துடன் கொடுத்துவிட்டார் என்றால் சரியில்லை . 1 ம் பிரதிவாதி சிறுவயதில் இருந்தே எங்களுக்கு செய்ய வேண்டிய கடமைகளை செய்து வந்தார் என்றால் சரியல்ல . அவர் எங்களை பார்த்து கொண்டதால் தான் இதுவரை தாவா சொத்துகளை பங்கு எதுவும் கேட்கவில்லை என்றால் சரியில்லை , தாவா சொத்துகளில் உள்ள ஒரு போதும் அனுபவத்தில் இருந்தது என்றால் சரியில்லை . சொத்தின் அனுபவத்தில் இல்லாமல் கூட்டாக அனுபவத்தில் இருப்பதாக பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியில்லை. எனது திருமண காலத்தில் இருந்தே சொத்தில் அனுபவத்தில் இல்லாததால் பாகம் கேட்க உரிமை இல்லை என்றால் சரியில்லை என் அம்மா இறந்த பிறகு பாகம் கேட்கிறேன் . தாவா சொத்துக்களில் என் தகப்பனார் , தாயார் சொந்தமான சொத்து தனித்தனியாக பிரித்து காட்டவில்லை என்றால் சரிதான் . நீண்ட காலமாக அனுபவத்தில் இல்லாததை மறைத்து கேட்டுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கது இல்லை என்றால் சரியில்லை . பிராது செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியில்லை.

Typed to my dictation in my presence and hearing and under my personal dictation and superintendence and interpreted to the Witness in the presence of the witness and admitted and signed by the witness to be correct.

L MAHESWARI
Digitally signed by L MAHESWARI
Date: 2026.06.15 06:56:28 +0530

Sub Judge,
Usilampatti.